2017 ஜூன் 24]
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்றால் 3,000 கால்நடைகள் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும் அந்தப் பகுதிகளில் 3,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) பேரறிவாளனுக்கு பரோல் வழங்கிடக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மத்திய சிறையில் ஆயுள் தண்டனைக் கைதியாக இருக்கக்கூடிய பேரறிவாளனுக்கு பரோல் கோரிக்கை அரசின் சார்பிலே நிராகரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, பேரறிவாளன் உள்ளிட்டவர்களையெல்லாம் விடுதலை செய்திட வேண்டுமென்ற தீர்மானமும் இதே மாமன்றத்தில், நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே விடுதலை செய்திட வேண்டுமென்று தலைமைச் செயலாளர் அவர்கள் கடந்த 2016 ஆம் ஆண்டு, அதாவது, 2–3–2016 அன்று மத்திய உள் துறைச் செயலாளருக்கு இதுபற்றி கருத்துக் கேட்டு கடிதமும்

எழுதியிருக்கிறார்கள். விடுதலை செய்திட மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கின்ற இந்த நிலையில், அரசு அவருக்கு பரோல் வழங்குவதற்கு தயங்குவது ஏன்? இதுபோன்ற வழக்கில், நடிகர் சஞ் சய் தத் போன்றவருக்கெல்லாம் மத்திய அரசின் அனுமதியின்றி மாநில அரசே பரோலை வழங்கியிருக்கிறது. எனவே, அதை முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு, மாநில அரசு உடனடியாக, பேரறிவாளனுக்கு பரோல் வழங்கிட வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுசம்பந்தமான அறிவிப்பு ஒன்றை நீங்கள் இன்று காலையில்தான் என்னிடத்தில் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில்தான் இருக்கிறது. பார்த்துவிட்டு, பின்னர் விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறேன்.

(ஆ) NEET தேர்வு முடிவுகள்–தமிழக மாணவர்கள் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான செய்தியைத் தங்கள்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களின் கவனத்திற்கும் கொண்டுவருகிறேன். NEET தேர்வினுடைய result தற்போது வந்திருக்கிறது. ஆனால், அந்தத் தேர்வினுடைய result–ஐப் பார்த்தால், தமிழக மாணவர்கள் பலமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். தமிழ்நாடு படுபாதாளத்திற்குப் போயிருக்கிறது. இதிலிருந்து எப்படி மீள்வது என்பது மிகப் பெரிய கேள்வியாக இருக்கிறது. இதனால் வருங்கால சமுதாயம் மிகவும் பாதிக்கப்பட்டுவிடும். எனவே, NEET தேர்வினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற தமிழகத்தை மீட்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் மூலமாக நான் எதிர்பார்க்கிறேன். இல்லாவிட்டால், பெரும்பாலான மாணவச் சமுதாயம் அடிபட்டு எதிர்காலமே இருண்டுவிடும். அத்தகைய நிலையில் இருக்கிறது. எனவே, இதுவொரு serious–ஆன பிரச்சினை. நாம் எத்தனையோ சட்டங்கள், திட்டங்கள் போட்டாலும், வருங்கால சமுதாயம் இல்லையென்றால் நம்மால் என்ன செய்ய முடியும்? ஆகையால், இதுவொரு முக்கியமான பிரச்சினை என்பதால் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.